# 16 உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு


16.1 உறுதிப்பூசுதல் வழங்குதல்

இப்படத்தில் உங்கள் அவதானத்தைச் செலுத்தி நீங்கள் பங்குபற்றிய உறுதிப் பூசுதல் வழங்கும் சடங்கு ஒன்றினை நினைவிற் கொள்ளவும்.

முன்னைய பாடங்களில் நீங்கள் உறுதிப்பூசுதலையும் அதைப் பெறத் தேவையான தகுதிகள் பற்றியும் உறுதிப்பூசுதல் பெறுவதால் கிடைக்கும் கொடைகள் கனிகள் பற்றியும் கற்றுக்கொண்டீர்கள். இப்பாடத்தின் மூலம் ''உறுதிப்பூசுதல் வழங்கும் முக்கிய சடங்கு'' பற்றி கற்றுக்கொள்ள முடியும்.

## உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலி

### ஆரம்ப வழிபாடு

உறுதிப்பூசுதல் பெற இருப்போர் முன்னால் செல்ல, ஆயரும் ஏனையோரும் பவனியாக ஆலயத்திற்குள் செல்வார்கள். ஞாயிறு திருப்பலியைப் போல ஆரம்ப வழிபாடு நடைபெறும்.

### இறைவார்த்தை வழிபாடு

முதலாம் வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம், அல்லேலுயா புகழ்கீதம், நற்செய்தி வாசகம் ஆகியவை இடம்பெறும். இறைவார்த்தையினால் உறுதிப்பூசுதல் பெற இருப்போரும் திருப்பலியில் பங்கு கொள்ளும் அனைவரும் ஊட்டம்பெறும் வகையில் மறையுரை நிகழ்த்தப்படும்.

### உறுதிப்பூசுதல் பெற இருப்போரை அழைத்தல்

தமது பங்கில் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற ஆயத்தமான பிள்ளைகளுக்குப் பங்குத் தந்தை உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை வழங்குமாறு ஆயரிடம் கேட்பார். அப்பிள்ளைகள் அதற்காகத் தகுந்த முறையில் ஆயத்தமா கியுள்ளனரா? தகுதி பெற்றவரா? என ஆயர், பங்குத் தந்தையிடம் வினவுவார். பங்குத் தந்தை பதிலளித்த பின்னர் ஆயர், அவர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளனர் என அறிவிப்பார். இதன் பின்னர் திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படும்.

### திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படல்

தீமையை விட்டு விலகி நம்பிக்கையின் சக்திவாய்ந்த சாட்சிகளாக கிறிஸ்தவ அழைப்பில் வாழ்வதற்குப் பெற்றோரும், ஞானப் பெற்றோரும் திருமுழுக்கின்போது கொடுத்த வாக்குறுதி, பிள்ளைகளால் இங்கு சுய விருப்புடன் புதுபிக்கப்படுகிறது. உறுதிப்பூசுதல் பெறுபவர் கிறிஸ்தவ அழைப்பில் வாழ்வதற்கு உறுதியளிப்பார். அதன் பின் ஆயர் தூய ஆவியின் வரம் வேண்டி செபிப்பார்.

**ஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோர் தலை மீது கைகளை வைத்து தூய ஆவியின் வரம் வேண்டி செபிப்பார்.**

இச்செயல் வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பாவம் கழுவப்பட்டு நீரினாலும் ஆவியினாலும் புதுவாழ்வைப் பெற்றுத்தந்த இறைவன் தேற்றரவாளரான தூய ஆவியைப் பிள்ளைகள் மீது பொழிய வரம்வேண்டி பின்வருமாறு செபிப்பார். துணையாளராகிய தூய ஆவியாரை இவர்களுக்குள் அனுப்பியருளும்: ஞானமும், மெய்யுணர்வும் தரும் ஆவியாரை, ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவியாரை அறிவும், பக்தியும் தரும் ஆவியாரை இவர்களுக்கு அளித்தருளும் தெய்வ பயத்தின் ஆவியாரால் இவர்களை நிரப்பியருளும்.

**கிறிஸ்மா தைலம் பூசுதல்**

ஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோரின் நெற்றியில் கிறிஸ்மா தைலத்தைப் பூசுவார். இச் சந்தர்ப்பத்தில் ஞானப் பெற்றோர் உறுதிப்பூசுதல் பெறுவோரின் தோள்மீது கைகளை வைப்பார். ஆயர் ‘‘தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள்’’ என கூறி ஒவ்வொருவரின் நெற்றியிலும் கிறிஸ்மா தைலத்தால் அபிஷேகம் செய்வார். இது உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்குவதின் வெளி அடையாளமாகும்.

இதன் மூலம் ஆன்மாவின் அழியாத முத்திரை பதிக்கப்படுவதுடன் கிறிஸ்துவின் போர் வீரர்களாகிறோம். கிறிஸ்மா தைலம் பூசப்பட்ட பின், ஆயர் கன்னத்தில் அல்லது தோளில் தட்டுவார். தாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து மறைப்பணியில் ஈடுபட கடமைப்பட்டுள்ளனர் என்பதை இது குறிக்கிறது.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை அர்த்தத்துடன் பெற்று முதிர்ச்சி பெற்ற வாழ்க்கைக்குள் நுழையும் அனைவருக்காகவும் இறை ஆசிரை வேண்டி மன்றாடப்படுகிறது.

**காணிக்கை ஒப்புக்கொடுத்தல்**

உறுதிப்பூசுதல் பெற்ற அனைவரும் தமது வாழ்வை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து காணிக்கைப் பவனியில் பங்கு பெறுவர்.

**செயற்பாடு**

1. உறுதிப்பூசுதல் சடங்கு முறையை உள்ளடக்கிய புத்தகமொன்றை தயாரிக்குக.

**வாழ்க்கைக்கு**

உறுதிப்பூசுதல் பெறும் சடங்கில் பங்குகொள்வோம்.